BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN 2703-8440




ஓவியம்: fathima minha, Batticaloa

வணக்கம்!

மே-17 நோர்வே நாட்டின் தேசிய தினம். இதனை மிகவும் சிறப்பாக நோர்வே குடிமக்கள் அனைவரும் இணைந்து ஆர்ப்பரித்து மகிழ்ச்சியாய் கொண்டாடுவர். இதன் மூலம் தமது குழந்தைகளுக்கும், இளையோருக்கும் தேசப்பற்றை புகட்டுவர். நோர்வேயில் வாழும் தமிழர்களும் இந்நாட்டு மன்னரோடும், மக்களோடும் இணைந்து தேசிய தினத்தை கொண்டாடுவதுண்டு.

அதேவேளை மே18 முள்ளிவாய்க்காலில் எமது தாயக மக்கள் கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்ட நாள். தமிழ் மக்களை சிங்கள அரசு திட்டமிட்டு அழித்த நாள். நோர்வே வாழ் தமிழர்களும் மே 18ஆம் நாளினை கண்ணீரோடு நினைவு கூர்ந்தனர். கடந்த சில நாட்களாக சிறிலங்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மத்தியில் கண்டி, கொழும்பு போன்ற சிங்கள மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் மே-18இல் நினைவு கூரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது சிங்கள இன மக்கள் மத்தியில் நல்லதொரு புரிந்துணர்வை ஏற்படுத்தி உள்ளதா என எண்ணத் தோன்றுகிறது.

ரணில் விக்கிரமசிங்க சிறிலங்காவின் பிரதம மந்திரியாக பதவியேற்ற பின்னர் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் சற்று குறைந்திருந்தாலும், பொருளாதார நெருக்கடிகள், மின் துண்டிப்பு, அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு, விலை ஏற்றங்கள் என பல்வேறு நெருக்கடிகளுள் தொடர்ந்தும் மக்கள் சிக்கிய வண்ணமே உள்ளனர். AC, Fan, gas அடுப்பு, குளாய்க்கிணறு என சொகுசான வாழ்வு வாழ்ந்து வந்த மக்கள் அவற்றைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் சவால்களை தாங்க முடியாதவர்களாக திரண்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியை தீர்க்க ஆசிய வங்கியிலிருந்து உலக வங்கி வரை எங்கெல்லாம் கடன்களை பெறலாம் என ரணில் விக்கிரமசிங்க முயன்றாலும், அனைத்து வங்கிகளிலும் அதிகப்படியான கடனை இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்கனவே பெற்றுவிட்டனர்.
இவ்வாறிருக்கையில் நாட்டில் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பது என்பது மிகப்பெரிய சவாலாகும். ஒரு நாட்டில் திடீரென யுத்தமோ, தொற்றுநோயோ, இயற்கை அழிவுகளோ, வேறு வடிவிலான அனர்த்தங்களோ ஏற்படும் பட்சத்தில் அவற்றிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு அந்நாட்டு அரசு எப்போதும் தயார் நிலையில் இருந்தேயாக வேண்டும்.
குறிப்பாக இவ்வாறான சூழலில் பொருளாதார நெருக்கடிகளே மிகப் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்துவது உண்டு. இவற்றினை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலும் திறனும் உள்ளவர்களை மக்கள் தேர்வு செய்யவேண்டும். நீண்டகால நோக்கிலான திட்டமிடல் திறன் கொண்டவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். நாட்டையும் நாட்டு மக்களையும் நேசிக்கும் நல் மனம் கொண்ட அரசியல்வாதிகளை இனங்கண்டு மக்கள் ஆட்சி பீடம் ஏற்றவேண்டும். இல்லாதவரை தற்போது நடைபெறும் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடரத்தான் போகிறது.

Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674

## நாம் பயணம் செய்ய முன் எவ்வாறான தடுப்பூசிகளைப் பெற வேண்டும்?

*FHI - நோர்வே சுகாதார திணைக்களத்தின் பரிந்துரைகள்.*

உங்கள் வயது மற்றும் நீங்கள் எங்கு பயணிக்கப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்து, நாங்கள் பரிந்துரைக்கும் பயண தடுப்பூசிகள் பற்றிய சில தகவல்கள்.

கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் முக்கிய ஆலோசனைகள் உள்ளன. தடுப்பூசிகளின் சிறந்த விளைவைப் பெற வேண்டுமானால் நீங்கள் பயணம் செய்வதற்கு போதிய நாட்களுக்கு முன்னரே தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பயண தடுப்பூசிகள் பற்றிய பொதுப்பார்வை**
நீங்கள் எந்த நாட்டிற்குச் செல்கிறீர்கள், அங்கு என்ன செய்யப் போகிறீர்கள், எவ்வளவு காலம் வெளியில் இருக்கப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்து தடுப்பூசிகளின் தேவை ஏற்படும்.

உங்கள் உடல்நிலை, வயது, ஏற்கனவே நீங்கள் பெற்றுக் கொண்ட தடுப்பூசிகளின் தன்மைநிலை மற்றும் தற்போதைய தொற்றுநோயின் நிலைமை ஆகியவற்றைப் பொறுத்தே மேலதிக தடுப்பூசிகள் தரப்படும். எனவே, நீங்கள் பயணம் செய்வதற்கு முன் உங்கள் மருத்துவர் அல்லது தடுப்பூசி அலுவலகத்துடன் கலந்துரையாடுதல் நல்லது.

பெரும்பாலான தடுப்பூசிகளின் முழுமையான பயனை நமது உடல், ஊசியினை பெற்ற நாளிலிருந்து குறைந்தது 1-2 வாரங்களுக்கு பின்னரே பெற்றுக் கொள்கிறது. சில தடுப்பூசிகள் முழுப் பலனைப் பெற இரண்டு முறை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**ஆவணப்படுத்தல்**
அனைத்து தடுப்பூசிகளும் தேசிய தடுப்பூசி பதிவேட்டில் SYSVAKஇல் பதிவு செய்யப்பட வேண்டும். நீங்கள் அல்லது உங்கள் குழந்தைகள் (16 வயதுக்குட்பட்டவர்கள்) எந்தத் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளீர்கள் என்று நீங்கள் அறிய, helsenorge.no தளத்தில் பார்க்கலாம்.







**தடுப்பூசிகள்** (helsenorge.no)
சில நாடுகள் சில நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போட்டதற்கான ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும் என பணிக்கிறார்கள். இதற்கு உங்கள் மருத்துவரிடம் உதவியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தடுப்பூசி சான்றிதழ்**
நீங்கள் வெளிநாட்டில் தடுப்பூசி பெற்றிருந்தால், தடுப்பூசியின் வகை மற்றும் பெற்றுக்கொண்ட திகதி குறித்த விபரங்களை எழுத்து வடிவில் ஆவணமாய் பெறுவது முக்கியம். நீங்கள் நாடு திரும்பிய பிறகு தேசிய தடுப்பூசி பதிவேட்டில் பதிவு செய்யலாம். □



# புனித தேவசகாயம் பிள்ளை

(1712 - 1752)

Rev.fr. Rene Beshman O.M.I





**"எங்களுக்கு புனிதர்கள் வேண்டும். அப்புனிதர்கள் குருத்துவ, துறவற அங்கிகள் அணிந்திருந்தவர்களில் இருந்து மட்டுமல்ல மாறாக தற்கால, நவீன தகவல் தொழில் நுட்ப பின்புலங்களில் இருந்து, சாதாரண அன்றாட வாழ்வியலில் இருந்து கொண்டு இறைவனின் உடன் இருப்புக்கு சாட்சியம் பகிர்கின்றவர்களாக வேண்டும்."**
இவ்வாறு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் 2013ம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற உலக இளைஞர் தினத்தில் எமக்கு ஒரு புதிய அழைப்பொன்றை விடுத்தார்.

இந்த பிரத்தியேக அழைப்புக்கு வலுச்சேர்ப்பதற்கும் திருஅவையிலே பொதுநிலையினர் ஆழமாகவும் ஈடுபாட்டோடும் புனிதத்துவத்தை தம்மிலே வளர்க்கவும், கிறிஸ்துவை அவரின் வாக்கை அனைத்து நிலைகளிலும் எடுத்துச் செல்லவும் முழு திரு அவைக்கும் சிறப்பாக ஆசியாவுக்கும் அருளப்பட்ட மாண்புமிக்கதும் முன்னுதாரணமான பரிசு தேவசகாயம் பிள்ளையின் அண்மைய புனிதர் நிலைத் தெரிவு. இவர் ஒரு தமிழர் என்பதால் நமக்கு இருட்டிப்பு மகிழ்ச்சி.

ஏலவே இந்தியாவில் இருந்து புனிதர்கள் அல்போன்ஸா, குரியாகோஸ், மரியம் திரேசியா போன்ற இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டோரும், புனித தோமையார், சவேரியார், அருளானந்தர், அன்னை தெரேசா போன்று வேறு நாட்டிலிருந்து இந்திய தேசத்திலே தியாகத்தோடு புனித வாழ்வு வாழ்ந்தோரும் உண்டு. மேற்கூறிய அனைவரும் கிறிஸ்தவ குடும்ப பின்புறத்திலும், துறவிகளுடைய குழுமங்களிலிருந்தும் இறைவனுக்கு சாட்சியம் பகிர்ந்தவர்கள். ஆனால் புனித தேவசகாயம் பிள்ளையோ சைவ சமய சூழலில் இருந்து மனம்மாறி பெயரளவு கிறிஸ்தவராக அல்லாது உத்தம கிறிஸ்தவராக வாழ்ந்து தனது இன் உயிரை கிறிஸ்துவுக்காக தியாகம் புரிந்த செம்மல், இந்தியாவின் முதல் மறைசாட்சி.

இந்தியாவின் தென்கோடியில் கன்னியாகுமரியில் திருவாங்கூர் அரச பிரிவில் நட்டாலம் கிராமத்தில் இந்து உயர்குடி வம்சத்திலே வாசுதேவன் நம்பூதிரி - தேவகி அம்மைக்கு புதல்வனாக

*1712ஆம் ஆண்டு சித்திரை 23ஆம் திகதி பிறந்தார். இவரின் இயற்பெயர் நீலகண்டபிள்ளை என்பதாகும்.*
*சிறுபராயத்திலிருந்தே தனது மரபுவழி சைவ மதத்திலே, அதன் சடங்குகளிலே மிகுந்த பக்தியும், பற்றும் கொண்டு சுத்தமான சைவனாக வாழ்ந்துவந்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் புலமையும் வில்வித்தை, வர்மக்கலை, போர் பொறிமுறை போன்றவற்றில் திறமையும் பெற்று சிறந்து விளங்கினார்.*



*திருவாங்கூர் அரண்மனையில் சாதாரண படை வீரராக பணியாற்றத் தொடங்கி, தனது திறமையினாலும் நேர்மையினாலும் உயர்ந்து, மன்னரின் நம்பிக்கைக்குரிய கருவூல பொறுப்பாளர் ஆனார்.*
*இவர் மேக் கோட்டைச் சேர்ந்த பார்கவியம்மாவை திருமணம் செய்து இல்வாழ்வு இனிதே வாழ்ந்துவந்தார்.*

*1741ஆம் ஆண்டு குளச்சல் துறைமுக போரில் நெதர்லாந்து கடற்படைத் தளபதி* Eustachius De Lannoy *தலைமையிலான படை மார்த்தாண்டவர்மன் படையிடம் தோற்றுப்போய் சரணடைந்தது. தளபதி லனோய் பின்னர் மன்னரின் அனுமதியோடு படைப்பிரிவுக்கு ஆலோசகரானார். அத்தோடு கருவூலக் காப்பாளர் நீலகண்டப் பிள்ளையோடும் நெருங்கிய நண்பர் ஆனார். தளபதி லனோய் ஒரு பக்தி மிக்க சிறந்த கத்தோலிக்க விசுவாசி.*

*இக்காலகட்டத்தில் நீலகண்டபிள்ளையின் தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் பலவித சிக்கல்கள் தலைதூக்கியது. நிம்மதி பறிபோனது. தெய்வங்கள் தன் மீது கோபம் கொண்டு தண்டிக்கின்றன என்ற எண்ணத்தில் சோகமும், கலக்கமும் கொண்டு விடுபட வழி தெரியாது மனச்சோர்வோடு இருந்தபொழுது அவரின் புதிய கத்தோலிக்க நண்பர் லனோய் திருவிவிலியத்தில் இருந்து பல நம்பிக்கை ஊட்டக்கூடிய பகுதிகளை நீலகண்டபிள்ளைக்கு எடுத்து இயம்பினார். அவற்றிலே யோபுவின் வாழ்க்கை படிப்பினைகளும், இயேசு இலாசர் இடையேயான நட்பும் அவரை வெகுவாக கவர்ந்தது. துன்பங்கள் துயரங்கள் தண்டனையின் அடையாளம் அல்ல, மாறாக எம்மைச் சோதிக்கவும், இறைவனின் அன்பை இன்னும் ஆழமாக உணர்ந்து கொள்ளவுமே என்பதை உள்ளூர ஏற்றுக்கொண்டார்.*

*எமக்காக பாடுபட்டு இறந்து உயிர்த்த இறைவனின் அன்புக்கு ஈடாக தான் அவரை அன்பு செய்ய துணிந்தார். இயேசு கிறிஸ்துவை தனது மீட்பராக ஏற்கத் தயாரானார். எனவே லனோய் இவரை வடக்கன் குளத்தில் பணிபுரிந்த குரு* Bouttari Italus *என்பவரிடம் அனுப்பிவைத்தார்.*
*உயர்குடியினர் அரச அவையில் பணிபுரிவோர் பிற சமயங்களுக்கு மனம்மாறிப் போவது அன்றைய காலத்தில் தண்டனைக்குரிய குற்றம். அதுமட்டுமன்றி சமுதாய அந்தஸ்தும் பறிபோகும் நிலையும் காணப்பட்டது. ஆதலால் குருவானவர் நீலகண்டபிள்ளையின் திருமுழுக்கை பிற்போட்டு வந்தார்.*

*ஒன்பது மாதங்களின் பின்னரும் நீலகண்டபிள்ளை கிறிஸ்தவத்தின் மீது கொண்ட ஆர்வம் குறையாது, உறுதியோடு அதிகரித்து வருவதைக் கண்டுணர்ந்து 1745ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14ஆம் திகதி திருமுழுக்கு வழங்கினார். இறைவனின் இரக்கத்தை கண்டுகொண்ட இலாசரின் தமிழ் பொருளான தேவசகாயம்பிள்ளையின் பெயரை தனக்குத் தரித்துக் கொண்டார். எவருடைய வற்புறுத்தலும் இன்றி எனது சொந்த விருப்பத்திலும் இயேசுவின் மீது கொண்ட பற்றுதலிலும் நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறேன். எந்த நிலையிலும் கிறிஸ்துவை மறுதலிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்து கொண்டார். அத்தோடு தனது மனைவியையும் திருமுழுக்குப் பெற வைத்தார்.*
*கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்ட தேவசகாயம்பிள்ளையின் வாழ்வில் பல மாற்றங்கள் தென்படத் தொடங்கின. தனது மரபுவழி சமய சடங்குகள் நிறைவேற்றுவதை நிறுத்தினார். கிறிஸ்துவை மற்றவருக்கு போதிப்பதோடு உண்மை தெய்வத்தை தேடவேண்டும் என்று கற்பித்தார். சாதி பேதங்களைக் கடந்து எல்லாரோடும் பழகி தன்னாலான உதவிகளை புரிந்து வந்தார்.*

*இதனால் அவரது பெயர் உயர்வாக பேசப்பட்டது. பலர் அவரது போதனைகளை ஏற்றுக் கொண்டனர். ஆனால் இன்னும் சிலர் அவரை இழிவாக பேசி மன்னரிடம் தேவசகாயம்பிள்ளை தேசத் துரோகம் செய்துவிட்டார் என்றும், வெளிநாட்டாரோடு சேர்ந்து எமது நாட்டைக் காட்டிக் கொடுக்கப் போகிறார் என்றும் பொய் கூறினர். மன்னரும் அதனால் ஏமாற்றப்பட்டு 1749ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆம் திகதி அவரைக் கைது செய்து கிறிஸ்துவத்தை புறக்கணித்து திரும்பவும் இந்துமதம் வந்து சேரவும் கட்டளை பிறப்பித்தான்.*

*ஆனால் தேவசகாயம்பிள்ளையோ உயிரை விட்டாலும் விடுவேனே அன்றி இயேசு கிறிஸ்துவை மறுதலிக்க மாட்டேன் என உறுதிபட கூறினார். இதனால் கோபமுற்ற மன்னன் அவரை சித்திரவதை, சிறைவாசம் ஊடாக மனம் மாற்ற முடிவு செய்தான். அத்தோடு தேவசகாயம் பிள்ளைக்கு கிடைக்கும் கொடுமைகளைக் காண்போர் பிற மதங்களுக்கு போகமாட்டார் என நம்பினான். எனவே அவரை முட்சவுக்கால் அடித்து மிளகுத்தூள் போட்டு, செம்புள்ளி கரும்புள்ளி குத்தி, எருக்கம் பூமாலை அணிவித்து எருமை மீது பின் வளம் ஏற்றி ஊர் ஊராய் இழுத்து வந்தனர். தாகமுற்ற வேளை சாக்கடை நீர் பருக வைத்தனர். புனித பவுல் அடிகளார் எவ்வாறு தனது துன்பங்களை, அவமானங்களை. சித்திரவதைகளை இயேசுவுக்காக பொறுத்துக்கொண்டாரோ, அதேபோல் எம் புனிதரும் இறை இயேசுவின் அன்புக்காக பொறுத்துக் கொண்டார்.*

*புலியூர் குறிச்சி என்ற ஊருக்கு வந்த பொழுது தாகத்திலே நீருக்காக இரஞ்சிய பொழுது நீர் கொடுக்காத நேரத்தில் தனது முழங்கையால் பாறை மீது மோத நன்னீர் ஊற்றெடுத்தது. இன்று கூட அது பிணிதீர்க்கும் தீர்த்தமாக பயன்படுகிறது. அங்கிருந்து பெருவினை ஊருக்கு புனிதரை இழுத்துவந்து ஆறு மாதமாக பட்டுப்போன வேப்ப மரத்தில் கட்டி வைத்த போது அந்த வேப்பமரம் துளிர்விட்டு வளரத்தொடங்கியது. பின்னர் காவலர்கள் அவரை நகருக்கு புறம்பே உள்ள ஆரல்வாய் மொழிக்கு கொண்டு சென்று சிறை வைத்தனர்.*

*மக்கள் பலர் இரகசியமாக அவரை சந்தித்து ஆசிர் பெற்று திரும்பினர். இதனால் கிறிஸ்தவம் பரவத் தொடங்கியது. அதனால் மிகவே ஆத்திரம் கொண்ட மன்னன் அவரை கொலை செய்ய ஆணையிட்டான். அதற்கிணங்க அவரை இரவோடு இரவாக அருகிலிருந்த காற்றாடி மலைக்கு இழுத்துச் சென்றனர். அவரால் நடக்க முடியாததால் தடியொன்றில் தூக்கிக் கொழுவி சென்றனர். காவலர் அவருக்கு கொலை செய்யும் திட்டத்தை சொல்ல அவர் தன்னை இறைவேண்டல் செய்ய அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் துப்பாக்கியால் சுட்டனர்.*

*ஆனால் துப்பாக்கி சரியாக இருந்தும் சுடவில்லை எனவே தேவசகாயம்பிள்ளை அதனைப் பெற்று அதன் மீது சிலுவை அடையாளம் வரைந்து கொடுக்க அதே துப்பாக்கியால் அவர் கொலை செய்யப்பட்டார். அப்போது அம்மலையின் பாறைகள் ஒலி எழுப்பியதாகக் கூறப்படுகிறது. அவரது உயிர் 1752 தை 14 அன்று இவ்வுலகில் இருந்து பிரிந்து இறைவனுடன் ஐக்கியமானது. அவரது உடல் மறைப்பணியாளரால் கண்டெடுக்கப்பட்டு தூத்துக்குடி கோட்டாறு புனித சவேரியார் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.*

*இவர் இறைத் தொண்டராக* (Servant of God) *2003. 12. 22 அன்றும், வணக்கத்துக்கு உரியவராக* (Venerable) *2012.06.28 அன்றும், முத்திப்பேறு பெற்றவராக* (Blessed) *2012.12.02 அன்றும், புனிதராக* (Sainthood) *2022.05.15 அன்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார். இவர் புனிதராக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு, இவரால் ஆற்றப்பட்ட புதுமையாக கருவிலே இறந்த குழந்தை இவரது பரிந்துரையால் உயிர் பெற்றதை திரு அவை அங்கீகரித்தது.*

*எனவே எமக்குத் தரப்பட்ட இப்புனிதர் மூலமாக நாமும் உறுதியும் தியாகமும் உள்ள கிறிஸ்தவர்களாக வாழ உறுதி பூணுவோம்.*




யாழ்ப்பாண நகர பிதா விஸ்வலிங்கம் மணிவண்ணன் (Meyor), அவரது மனைவி, நல்லூர் நகரசபை தலைவர் மயூரன் மற்றும் யாழ் நகர சபை உறுப்பினர் பார்த்திபன் ஆகியோர் கடந்த மே 3 - 7ம் நாள் வரை நோர்வே பேர்கன் நகரில் தங்கியிருந்தனர். இவர்களை நோர்வே பேர்கன் தமிழ் சங்கம் அழைத்து பல கருத்தமர்வுகளை நடத்தினர்.

## மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் அவர்களுடனான நேர்காணல்.



**நேர்காணன்: யூலியஸ் அன்ரனி**

*வணக்கம்*
*நீங்கள் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கு சென்று வருகிறீர்கள். உங்களது இந்த பயணத்தின் நோக்கம் என்ன?*

ஐரோப்பாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை சந்தித்து அவர்களது அனுபவங்களைப் பெறவேண்டும். அவர்கள் எவ்வாறு திறனாக செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். அதேவேளை எமது நீண்டகால இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை பெறுவதற்கான அழுத்தத்தை இலங்கை அரசின் மீது கொடுக்க வேண்டும், எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஐரோப்பிய இன்னும் குறிப்பாக நோர்வேஜிய தரப்புக்கும் கூறுவதற்காகவே இங்கு வருகை தந்துள்ளோம்.

*நோர்வே பேர்கனில் உள்ள நோர்வேஜிய அமைப்புக்கள் உடனான சந்திப்புக்கள் பற்றி சொல்லுங்கள்...*

நோர்வேஜிய அமைப்புக்களுடனான சந்திப்புகள் அனைத்தும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. சந்திப்புக்களைத் தமிழ்ச் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. குறிப்பாக Christian Michelsens institutt (CMI) உடனான சந்திப்பில் எமது தாயகத்தில் உள்ள இன முரண்பாடு தொடர்பாக நாங்கள் கலந்துரையாடினோம்.

இது பெரும் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த சந்திப்பையும் சிறப்பாய் ஏற்படுத்தித் தந்த பேர்கன் தமிழ்ச் சங்கத்துக்கு நன்றி கூற வேண்டும். ஏனென்றால் CMIதான் 1996இல் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை முதன்முதலில் நடத்தியது. இங்குதான் பேச்சுவார்த்தைக்கான அடித்தளம் இடம் பெற்றது.



அதன் பின்னர் 2001ஆம் ஆண்டிலிருந்து சமாதானப் பேச்சுவார்த்தையாக மாறி சமாதான உடன்படிக்கைகள் நடைபெற மிக முக்கிய காரணமாக இருந்தமை நமக்கு தெரியும். அந்தவகையில் நாம் அவர்களோடு தற்போது கலந்துரையாடிய விடயங்கள் மிகவும் பயனுள்ளவை என எண்ணுகின்றோம்.

மீண்டும் ஒரு பேச்சு வார்த்தை தமிழர் தரப்புக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சர்வதேச மத்தியஸ்தத்தோடு நடைபெற வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர் சமாதானம் உருவாகிவிட்டதா? ஏன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைச் சர்வதேசம் முன்னெடுக்காது இருக்கிறது? போன்ற கேள்விகளை அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் வருகின்ற ஆகஸ்ட் மாதமளவில் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்க உள்ளதாக கூறினார்கள்.

*மிகவும் மகிழ்ச்சி. தற்போதைய சூழ்நிலையில் நமது நாடு குறிப்பாக யாழ் மண் எவ்வாறு உள்ளது?*

ஆம். நமது மண் (பெருமூச்சு) வடக்காக இருக்கலாம், கிழக்காக இருக்கலாம் அல்லது நீங்கள் கேட்டது போல யாழ்ப்பாணமாக இருக்கலாம் மிகுந்த ஏமாற்றகரமான சூழலில் வசித்து வருகின்றோம். நம்பிக்கை இழந்தவர்களாக எமது மக்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக தற்போது நமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மக்களை சற்று வேதனை அடைய செய்திருக்கின்றது. எங்களுடைய தமிழ் மக்கள் பெரிதும் புலம்பெயர்ந்த மக்களுடைய ஆதரவில் வாழ்கிறார்கள். அதைத் தவிர எந்தவித எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் அற்றவர்களாக வாழ்க்கையை கழித்து வருகிறார்கள்.

*சிறிலங்காவில் தற்போதைய சூழலில் பொருளாதார நெருக்கடியால் நாட்டில் பல்வேறு வகையிலான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் தமிழர்கள் பெரிதும் பங்கு கொள்ளாது உள்ளார்கள். இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் கட்சிகள் தமது உரிமைக்கான குரலினை உயர்த்தலாம் என்ற கருத்தும் நிலவி வருகிறது. இதிலே எமது தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒருமித்த குரல் கொடுப்பார்களா?*

ஆட்சி மாற்றத்திற்கான தென்னிலங்கை மக்களின் கோரிக்கைகளிலே எமது தமிழ் மக்கள் நம்பிக்கை அற்றவர்களாகவே இருக்கிறார்கள். மாற்றம் ஏற்பட்டு வரவிருக்கும் புதிய அரசும் தமிழ் மக்களுக்கு புதிதாக ஏதேனும் செய்து விடுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. நீங்கள் கூறியது தான் எனது கோரிக்கையும். இந்த வாய்ப்பினை, சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும். தமிழ் தலைவர்கள் ஒன்றிணைந்து இந்தக் களத்தைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக CMI உடனான சந்திப்பில் நான் வேண்டுகோள் விடுத்தேன்.

வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் சிறிலங்கா தொடர்பான கலந்துரையாடலில் தமிழ் தலைவர்மாரையும் அழையுங்கள், அதுவே சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான களமாக அமையலாம் என்ற



அடிப்படையில் அவர்களையும் அழைக்கும்படி நான் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.
அதையும் அவர்கள் சாதகமாக வைத்து தமிழ்த் தலைவர்களையும் அழைப்பதாக கூறியுள்ளனர். இந்தக் களத்தில் பந்தினை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழர் தரப்பிடம் உண்டு. தமிழ் மக்களின் தலைவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் மக்கள் நலன் சார்ந்து சிந்தித்து செயற்பட வேண்டியது முக்கியம்.

*புலம்பெயர் வாழ் மக்கள் தமது தாயக தொப்புள்கொடி உறவுகளுக்கு பல வழிக-ளிலும் உதவி புரிந்து வருபவர்கள். அவர்கள் சிந்தனையாகவே வாழ்ந்து வருபவர்கள். இவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

புலம்பெயர் வாழ் மக்கள் எமது தாயக மக்கள் பற்றி சிந்திப்பவர்களாகவே இருக்கிறார்கள், தாயக மக்கள் சார்பாக நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன். ஆனாலும் எனக்கு சில ஏமாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. புலம்பெயர் தமிழர்களிடமும் பிரிவினைகள் உண்டு.
அது தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமான எதிர்காலத்தை அமைப்பதற்குத் தடையாக அமைந்து விடுமோ என்ற அச்சம், ஏக்கம் என்னிடம் இருக்கிறது. தாயகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் போலல்லாது புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதுவே தாயகத்திலுள்ள தலைவர்களுக்கும் ஒரு படிப்பினையாக, இறுக்கமான செய்தியாக அமையும். ஆகவே நாங்கள் ஒன்றுபட்டு தமிழ் மக்களின் விடுதலைக்கான தேரை இழுக்க வேண்டும். இவ்விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமும் நான் அன்பாகவும் உரிமையுடனும் கேட்டுக்கொள்வது "ஒன்றிணைந்து எமது விடுதலைக்கான தேரை இழுக்க வாருங்கள்".

*பேர்கனிலுள்ள தமிழ் மக்களுடனான சந்திப்பு பற்றி....*

பேர்கனிலோ அல்லது ஏனைய ஐரோப்பிய நாடுகளிலோ யாழ்ப்பாண மண்ணை அபிவிருத்தி செய்வதற்காக, அழகு படுத்து வதற்காக புலம்பெயர் தமிழ் மக்களோடும் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களோடும் நாங்கள் பல பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம். அந்த பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக அமைந்தது. எமது அபிவிருத்திக்காக புலம்பெயர்ந்த தமிழர்களும், உள்ளூராட்சி மன்றங்களும் தம்மால் இயன்ற உதவிகளை செய்வதாக கூறியுள்ளனர்.
அது எமக்கு திருப்திகரமாக உள்ளது.
அவை கைகூடும் பட்சத்தில் யாழ்நகருக்கு நன்மையாகவே
அமையும்.

*உங்கள் பணிகள் சிறந்த முறையில் தொடரவும், முயற்சிகள் பயனுள்ளதாக அமையவும் எமது வாழ்த்துக்களும், நன்றிகளும்.*

# மே 18 சந்ததிகளை விதைத்தோம்

-எ.ஜெனாத்-



யூதாசின் முத்தங்களால்
கல்வாரியில் அறையப்பட்டோம்
பீரங்கி தாக்குதல்களை முறியடிக்க
வியூ கம் இருந்தது
கூடவே நடந்தவர்கள் புறமுதுகில்
ஏற்றிய கைவாள்களில் விசமேற்றப் பட்டிருந்தது!

சிதிலமான எம்மவரின் உடலங்களின் எண்ணிக்கையில்
காக்கை குருவிகளை சுடுவதற்கும்
இயந்திர இதயம் வேண்டும்!

தலைகள் துண்டிக்கப்பட்ட பின்பும்
ஓடிக்கொண்டே இருந்தன
வாழத் துடித்தவர்களின் முண்டங்கள் !

உயிரிலும் மானம் பெரிதென
போராடத் துணிந்தோம்
எம்மை நிர்வாணமாக்கி சுடுவதிலேயே
அலாதியாய் அக்களித்தார்கள் !

வெள்ளைக் கொடிகளை அசைத்தோம்
தாக்குதலுக்கான கட்டளைகள்!

இருகைகளையும் உயர்த்தி சரணடைந்தோம்
நெஞ்சில் குறிவைக்க சுலபமாயிற்று!

நந்திக் கடல் வரை ஓடினோம்
இனி ஓடவும் இடமில்லை
வானத்திற்கு ஏணி கட்டுவதற்கு
பட்டினியுடலில் தெம்பில்லை!

நாம் குண்டடிகளுக்கு தப்பிக்க
பழக்கப்பட்டவர்கள்
அந்த வினோதக் குண்டுகளின்
பெயர்களோ இரைச்சல்களோ
நாம் இதுவரை அறியோமென்பதால்
திகைத்தோம்

"ஒன்றரை இலட்சம்" மனிதர்களென்றால்
எத்தனை கோடி கனவுகள்?
சந்ததிகளை விதைத்தோம்
முள்ளிவாய்க்காலில் !

18.05.2022

# மே 18. முள்ளிவாய்க்கால் நினைவு வாரம்



-காவலூர் அகிலன்-



இதே போன்ற நாட்களில் அன்று பதுங்கு குழிகளிலும் படகினால் மூடப்பட்ட அரணுக்குள்ளும் எங்கள் பொழுது கழிந்துகொண்டிருந்தது.
யார் இருக்கிறார் யார் இல்லை என்ற தேடல் நடத்த நேரமிருக்கவில்லை.
கொஞ்சம் நிமிர்ந்தால் கூட தலை உருண்டு கீழே விழும் நிலை.
அப்படி எத்தனையோ தலைகள் உருண்டு விழுந்துமிருக்கின்றன.
அவ்வாறான நிலையிலிருந்துதான் மீண்டுவந்தோம்.

காலில் பாட்டா இல்லை, இரத்தம் படிந்த உடைகள், பரட்டைத் தலைமுடி, அழுது அழுது கண்ணீர் வடிந்து காய்ந்துபோன கோடுகள் இப்படித்தான் ஒவ்வொருவரும் முள்ளிவாய்க்காலில் இருந்து புறப்பட்டோம்.

சோறாக்கிய கஞ்சியை மதிய உணவாகவும் சோறை இரவு உணவாகவும் உட்கொண்டோம்
இலை குலைகளைப் பறித்து உணவாக்கினோம்.
வடலி மட்டைகளை உரித்து அடுப்பெரித்தோம்.
நாய் இறைச்சியையும் மாட்டிறைச்சியையும் பிரித்தறிய முடியாமல் சூடாக்கிச் சாப்பிட்டோம்.
குப்பி விளக்கை பதுங்கு குழிக்குள் வைத்து அதன் ஒளியில் உணவுண்டோம்.
மர நிழல்களிலும் வீதிகளிலும் வழங்கப்பட்ட கஞ்சிக்காக வரிசையில் நின்றோம்.
அதற்காக உயிரையும் விட்டோம்.
நாங்கள் உயிரோடு மீண்டுவருவோம் என யாரும் நினைக்கவில்லை
எங்களின் வாழ்வு இந்தக் கடலோடு முடியப் போகிறது என நினைத்தோம்
ஆனால் எங்கள் வேண்டுதல்களும் எங்களுக்காக உயிர்த்தியாகம் செய்த மறவர்களின் ஆசிகளும் எங்கள் ஒவ்வொருவரையும் காத்து பாதுகாப்பாக கரைசேர்த்தது.
நாம் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காது.
ஆதலால்தான் நினைவுகள் வரும்போதெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.
மறக்க நினைத்த எத்தனையோ விடயங்களை மறந்து வாழ்ந்துகொண்டிருக்கிறோம்
ஆனால் இந்த மே 18ஐ தமிழர்கள் மறக்க மாட்டார்கள்
அது அவர்கள் அம்மணமாய் நின்ற நாள் அல்லவா....

# மரவள்ளி - உணவுப் பஞ்சகாலத்தின் ராணி

**-ஏ.எம். நியாஸ் அகமட்**
(சிரேஸ்ட விரிவுரையாளர்), இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.



## மரவள்ளியின் மற்றைய பாவனைகளும், பயிர்ச்செய்கை முறையும்:

மரவள்ளியானது பிரதான மற்றும் துணை உணவுப் பொருளாக மட்டும் பாவிக்கப்படாமல் பல்வேறு கைத்தொழில்களின் மூலப்பொருளாகவும் பாவிக்கப்படுகின்றது.
உலகின் மொத்த மரவள்ளி உற்பத்தியில் 58 சதவீதமே உணவாகப் பயன்படுகின்றது.
28 சதவீதம் கால்நடை உணவாகவும், 4 சதவீதம் மதுசாரம் மற்றும் மாப்பொருள் உற்பத்திக்கும் பயன்படுகின்றது. 10 சதவீதம் வீணாகிப் போகின்றது. மரவள்ளிக் கிழங்கிலிருந்து பெறப்படும் மாப்பொருளிலிருந்து உணவு தவிர்ந்த பல தயாரிப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன.
அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.



1) சவ்வரிசி,
2) குளுக்கோஸ்,
3) புறக்டோஸ் சாறு,
4) டெக்ஸ்ட்ரின்,
5) பசை
6) கால்நடை உணவுகள்
7) எதைல் அல்கஹோல்
8) பருத்தி, சணல் ஆடைகள் உற்பத்தி
9) காகிதம், காட்போட் அட்டைகள்
10) திரவ குளுக்கோஸ், டெக்ஸ்ரோஸ் மருந்து, உணவு
11) சவ்வரிசி

*12) சலவைக் கஞ்சி*
*13) எரிபொருள் உற்பத்தி*
*14) சித்த மருத்துவத்தில் இதன் இலைகளும், கிழங்குகளும் புற்றுநோய், சின்னம்மை, பெரியம்மை, சொறி சிரங்கு, அம்மை, வயிற்றுப்புண், கண்நோய்கள், மூட்டுவாதம், காய்ச்சல்கள், தலைவலி, மலச்சிக்கல்கள் போன்றவற்றை குணப்படுத்தும் மருந்துகள் உற்பத்திக்கு பாவிக்கப்படுகின்றன.*

## மரவள்ளி பயிர்ச்செய்கை:

*சிறந்த மாப்பொருள் மூலாதாரமானதும், பாரியளவில், கல்சியம், பொஸ்பரஸ், விற்றமின் சீ போன்றவைகளைக் கொண்டதுமான மரவள்ளி, செய்கை பண்ணப்படுவதற்கு குறைந்த நீரும், குறைந்த போசணைப் பொருளுள்ள மண்ணும் போதுமானதாகும். இவை இங்கு செழித்து வளரும்.*

*இலங்கையில்* MU-*51, கிரிகாவடி,* CAR5 *555, சுரணிமாலா, சுவர்ணா, ஷானி,* HORDI-MU-1, HORDI *06 போன்ற வர்க்கங்கள் காணப்படுகின்றன.*
*கடல் மட்டத்திலிருந்து 1500 மீற்றர் உயரமுள்ள இடங்கள் வரை பல்வேறு வகையான மண்ணிலும், காலநிலைகளிலும் வளரக்கூடியது. இதன் செய்கைக்கு 1000 - 1500 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், 25-29 பாகை செல்சியல் வெப்பநிலையும் போதுமானதாகும்.*
*நீர் தேங்குகின்ற, காரமான மண் பொருத்தமற்றதாகும். பீஎச் 5- 6 உள்ள மண் செய்கைக்கு பொருத்தமானதாகும்.*
*செய்கை பண்ணுவதற்கு 12000 - 13000 தண்டுத் துண்டங்கள் ஒரு ஹெக்டேயருக்கு* (90 cm x 90 cm *இடைவெளியில்) தேவைப்படுகின்றன.*
*அதிகமாக கிளைக்கும் வர்க்கங்கள் 6400 - 65000 துண்டங்களும்* (125 x 125 cm *இடைவெளில்),* *ஏற்றுமதிக்கான வர்க்கங்கள் 17000-18000 துண்டங்களும்* (75 x 75 cm *இடைவெளில்) நடுகை செய்வதற்கு 1 ஹெக்டேயருக்கு தேவைப்படுகின்றன.*

*நிலத்தை உழுது பண்படுத்தி, மழைக் காலத்தில் நேரடியாக தண்டுத் துண்டங்கள் நடுகை செய்யப்படுகின்றன. ஈரவலயத்தில் கால, சிறு போகங்களிலும், உலர் வலயத்தில் கால போகத்திலும் செய்கை பண்ணப்படுகின்றது. சில இடங்களில் 50 கிலோகிராம் பொலித்தீன் பைகளிலும் செய்கை பண்ணலாம்.*
*சிபாரிசு செய்யப்பட்ட அளவில் சேதன அசேதன பசளைகள் பாவிக்கப்பட வேண்டும். நடப்பட்டு 15 நாட்களில் 1 ஹெக்டேயருக்கு 85 கிலோகிராம் யூரியா, 120 கிலோகிராம் ரைசுப்பர் பொஸ்பேட், 125 கிலோகிராம் மியயுறியேற்ஒப்பொட்டாஸ் பாவிக்க வேண்டும். இரண்டரை தொடக்கம் மூன்று மாதங்களிலும், நான்கு தொடக்கம் நான்கரை மாதங்களிலும் யூரியா 85 கி-லோகிராம், மியுரியேற்ஒப்பொட்டாஸ் 60 கிலோகிராமும் பாவிக்க வேண்டும்.*
*ஆரம்ப காலங்களில் நீர்ப்பாசனம் அல்லது மண் ஈரலிப்பு தேவைப்படும்.*
*களை கட்டுப்படுத்தல் ஆரம்பத்திலிருந்து, பயிரினால் நிலம் மூடப்படும் வரை செய்யப்பட வேண்டும்.*
*வைரசு நோயைக் கட்டுப்படுத்த அதன் காவி அழிக்கப்படவேண்டும். அதற்கு வேப்பை இலையின் சாறு பாவிப்பதுடன், உயிர் வேலி, சோளத்துடன் கலப்பு பயிர்ச்செய்கையும் செய்யப்பட வேண்டும். வெள்ளைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த நீரை மேற்புறமாக தெளி பாசனம் வேண்டும்.*
*9-12 ம் மாதங்களில் அறுவடை செய்யலாம். கிரிகாவடி வர்க்கம் மட்டும் ஆறு மாதங்களில் அறுவடை செய்யலாம்.*
*ஒரு ஹெக்டேயருக்கு 35 - 40 தொன் கிழங்குகளை அறுவடை செய்யலாம்.*
*எனவே பஞ்ச காலத்தின் ராணியான மரவள்ளியை பயிரிட்டு, அல்லது குறைந்த விலையுள்ள மரவள்ளிக் கிழங்கை வாங்கி சமையலுக்கு பிரதான, துணை உணவுகளாக பாவிப்பதன் மூலம் வரப்போகின்ற அல்லது ஒரு வேளை வரவிருக்கின்றன பஞ்சகாலத்தை அல்லது உணவுப் பாதுகாப்பு குறைந்த காலத்தை துணிச்சலுடன் எதிர்கொள்ளலாம்.* □




**-மனோ-**

கழுதை எங்குபோனாலும் ஏதாவது பிரச்சினை அதைத் தொடர்ந்துகொண்டே இருந்தது. இந்தக் கழுதைக்கு தானுண்டு தன்பாடுண்டு இருக்கத் தெரியவில்லை.
சக கழுதைகள் சில இதை எச்சரித்தன.
உனக்குத் தேவையில்லாத வேலை. புகழுக்கு ஆசைப்படுகிறாய்! அனுபவிப்பாய் என்றன. அதுகளுக்கு பட்ட அனுபவமாயிருக்கலாம்! இந்தக் கழுதை சொல்வழி கேட்கவில்லை. அது முழுமனதோடு பொதுவேலைகளில் இறங்கியது. கடைசியில் மற்றக்கழுதைகள் சொன்னதுபோல மன உளைச்சலோடு சலித்தே போனது. இந்தச்சலிப்பு கழுதையைப் புடம் போட்டது.

எங்கோ தவறிருக்கிறது என்பதை கழுதையால் கண்டுகொள்ள முடிந்தது.
கழுதை மற்றவர்களில் தவறைத் தேடுவதைவிட தன்னில் என்ன தவறிருக்கலாம் என்று தேடத்தொடங்கியது. அது சுலபம் என்றும் நம்பியது. ஆனால் அது அவ்வளவு சுலமாய் இருக்கவில்லை.

நேர் வழி, நேர்மை என்பது உள்ளுக்கு அடிமனதில் இருக்க வேண்டியது. உண்மையையும் உழைப்பையும் வெளியே காட்டத்தேவையில்லை. அதைக்காட்டமுடியாது.
அது மற்றவர்கள் காண்பது. காணவேண்டியது.
கழுதை தன் செயல்களுக்கூடாக அதைக்காட்ட ஆசைப்பட்டது.
அவசரப்பட்டது. வேகம் கொண்டது.

வேகம் எல்லோருக்கும் ஏற்புடையதல்ல. இயலுமானதுமல்ல. கழுதையின் எண்ணஓட்டத்தைப் புரிந்துகொள்ள காலஅவகாசம் போதுமானதுமல்ல.

1. வேகம் கழுதையின் எதிரியானது.

2. சக கழுதைகளை முழுமையாய் புரிந்துகொள்ளத் தவறியது. எழுந்தமானமாக எல்லோரையும் நம்பியது. சந்தேகத்திற்கும் எச்சரிக்கை உணர்விற்கும் இடையேயான மெல்லியகோட்டை கழுதையால் கண்டடைய முடியவில்லை.
சந்தேகத்துடன் சக கழுதைகளுடன் பழகுவது நல்லதல்ல என்ற நல்ல நோக்கம்கூட கழுதைக்கு எதிரியானது.

3. நல்ல கழுதைகள் இந்தக் கழுதையை உள்ளூர விரும்பினாலும், முக்கியமான நேரங்களில் “நமக்கேன் வீண்சோலி” என்று அதுகள் ஒதுங்கச்செய்தன. யதார்த்தத்தை கழுதை

உணரத்தவறியது. இந்தக்கழுதை நல்ல சில கழுதைகளையும் அனாவசியமாக எதிர்நிலைக்குத் தள்ளியது. சலிப்பு கழுதையைக் கட்டி அணைத்தது.

4. எல்லாவற்றையும் நேர்படப்பேசுதல் அழகு என்று அது தவறாக எடை போட்டது. நேர்படப்பேசி எதிரிகளைச் சம்பாதித்துக்கொண்டது.

5. தான் மற்றவர்களை சந்தேகத்துடன் அணுக்கக்கூடாது என்று விரும்பியதே தவிர, மற்றவர்கள் தன்னைச் சந்தேகத்துடன் அணுகமுடியும் என்பது கழுதையின் மரமண்டைக்குள் இறங்கவில்லை. கழுதை தான் இயங்கிய ஒவ்வொரு குழுக்களிலும் கண்ணுக்குத் தெரியாத ஒரு பலமான எதிரியைச் சம்பாதித்துக் கொண்டது. அதுவே, தான் பிரச்சினைகளை எதிர்நோக்க முக்கியகாரணம் என்பதை கழுதை காலங்கடந்தே உணர்ந்து கொண்டது.

அதிகாரத்தில், தலைமைக் கதிரைக்குக் குறியாக இருக்கும் ஒரு கழுதைக்கு, இந்தக் கழுதையின் செயற்பாடுகள் அச்சத்தை தருவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.
இந்தக் கழுதையின் உண்மைக்கும் உழைப்பிற்கும் அமைப்பிற்குள் அதுக்கு கிடைக்கும் வரவேற்பை அதுகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதுகள் மிக நுட்பமாகச் செயற்பட்டன. இந்தக் கழுதைக்கு எதிராக அவதூறு தயாரிப்பதிலும் அதை மற்றக் கழுதைகளுக்கு கொண்டு சேர்ப்பதிலும் தமது பெறுமதிமிக்க நேரத்தைச் செலவு செய்தன. இந்தக் கழுதையின் ஒவ்வொரு செயலும் அது தலைமைக்கு, அதிகாரத்துக்கு வரவே செய்கிறது என்ற விம்பைத்தைக் கட்டமைத்துவிட சுலபமாக உதவின. அந்தக்கோணத்தில் கழுதையைப் பார்க்கும் ஒருவரால் “ஆம்! கழுதை அப்படித்தான் செயற்படுகிறது” என்றுதான் நம்பமுடியும்.
ஆனால் அதில் ஒரு துளியும் உண்மையில்லை என்பது கழுதைக்கு மட்டுமே தெரியும்.

தலைமை என்பது வெறுமனே பதவியல்ல அது மிகப்பாரிய பொறுப்பு என்பதை கழுதை தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தது.

இந்த எதிர் வலைக்குள் சிக்குண்டு தொடரவும் முடியாது மீளவும் முடியாது கழுதை தத்தளித்தது. மனச் சந்தோசத்திற்காக ஒரு பொதுவேலைக்குள் நுழைந்து மன உளைச்சலில் தவிப்பதையிட்டு அது மேலும் கவலை கொண்டது.

உன் வாழ்வின் பெறுமதி என்ன? நீ இந்த சமூகத்திடமிருந்து கூச்சமில்லாது எவ்வளவோ பெற்றாய். திரும்ப நீ என்ன கைமாறு செய்தாய்? என்று திரும்பவும் யாரோ கழுதையின் சிந்தனையைத் தூண்டி விட கழுதை சிந்திக்கத் தொடங்கியது.

சகலதும் சரியாக அமையப்பெற்ற சூழலில் ஒரு விடயத்தைச் சாதிப்பது ஒன்றும் சாதனையல்ல. மிகச்சிக்கலான இடத்தில், சிக்கலான சூழலில் அதை எதிர்கொண்டு வெற்றிபெறுவதே சாதனை என்பதை கழுதை கற்றுணர்ந்தது. அனுபவம் கழுதைக்கு அதைக் கற்றுத்தந்தது. இன்னும் கழுதைக்கு தான் சாதிக்கவேண்டும் என்ற வெறி எதுவும் கிடையாது. ஆனாலும், கழுதைக்கு தான் கற்றிந்ததை, தன் அனுபவங்களை மற்றக் கழுதைகளுடன் பகிரவேண்டும் என்ற பேரவா உளச்சுத்தியாய் மேலெழுந்தது. தன் முக்கால்பங்கு வாழ்நாளில் தான் சக உயிரினங்களிடம் பட்ட கடனை எஞ்சிய குறுகிய காலத்துள் அடைத்துவிடத் துடித்தது.

தான் இன்று இந்த நிலையை எட்டுவதற்கு எத்தனையோ கழுதைகள் எத்தனையோ வழிகளில் உதவியிருக்கின்றன. தன்னிடம் அன்பு பாராட்டி இருக்கின்றன. அரவணைத்திருக்கின்றன. ஆதரவு தந்திருக்கின்றன. இடுக்கண் வருங்கால் நகுந்திருக்கின்றன. இல்லாவிட்டால் இந்த வாழ்வை இந்த நிலையை தான் எட்டியிருக்கமுடியாது என்று கழுதை உறுதியாய் நம்பியது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாது தனக்கு உதவியவர்களை எண்ண கழுதைக்கு நெஞ்சு விம்மியது. கழுதைக்குத் தெரியும் தன்னிடம் இருப்பது இன்னும் சொற்ப காலம்தான் என்று. அதற்குள் தான் பட்ட கடனை ஏதாவது வழியில் அடைத்துவிட கழுதை துடிக்கிறது.

# நெருக்கடி தீருமா, நீளுமா?

-கருணாகரன்-






நாட்டிலே ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து கொண்டிருக்கிறது. இது இப்போதைக்கு குறையப் போவதில்லை.
மாற்று உபாயங்கள், மாற்று ஏற்பாடுகள், கூட்டுழைப்பு, ஒருங்கிணைந்த செயற்பாடுகள், புதிய - வினைத்திறனுடைய திட்டமிடல்கள், திட்டங்களை வகுப்பதோடு நிற்காமல் அவற்றை நடைமுறைப் படுத்தும்போது கண்காணித்து முழுமைப்படுத்தல் எனப் பலவற்றைச் செய்யவில்லை என்றால் இந்த நெருக்கடி மேலும் தீவிரமடையும்.

இதில் அரசாங்கத்துக்கு நிகரான பொறுப்பு அதன் கட்டமைப்பில் உள்ள அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் உண்டு. இன்னும் சரியாகச் சொன்னால் இவர்களுக்கே கூடுதல் பொறுப்புண்டு.

ஆனால், ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை எதிர்கொள்ளக் கூடிய ஆலோசனைகளையும் உபாயங்களையும் பொருத்தமான திட்டங்களையும் எந்த மாவட்டச் செயலகமும் முன்வைத்ததாகத் தெரியவில்லை.
மாவட்டத்திலுள்ள சிந்தனையாளர்கள், துறைசார்ந்து செயற்படுவோர், முதலீட்டாளர்கள் போன்ற தரப்புகளுடன் இணைந்து பொருத்தமான - அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக மக்களை வழிப்படுத்தும் வேலைகள் மிக மிக அவசியம்.

முதலில் மக்களுக்கு நிலைமையின் தாற்பரியத்தைப் பற்றி தெளிவூட்ட வேணும். அப்பொழுதுதான் அவர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு மாற்று ஏற்பாடுகளைச் செய்வார்கள். செலவுகளைக் குறைப்பது, பொருட்பங்கீட்டை முறையாகக் கையாள்வது, சாத்தியமான உற்பத்திகளில் ஈடுபடு-வது, அவற்றைப் பெருக்குவது, சந்தையைச் சீராக வைத்திருக்க முயற்சிப்பது, உழைக்கும் நேரத்தை அதிகரிப்பது, நோய்த்தடுப்புக்கான கரிசனையைக் கொள்வது எனப் பல விடயங்களில் மக்களைத் தயார்ப்படுத்த வேண்டியுள்ளது.

ஏற்பட்டுள்ள நெருக்கடியை எதிர்கொள்வதற்கு தாம் முயற்சிக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்க நிர்வாகப் பொறிமுறை எந்த வகையில் எல்லாம் பங்களிக்கும், உதவும் என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும். அதற்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.
மாவட்டத்தில் மாவட்டச் செயலகம், பிரதேச செயலங்கள் எனப் பல பிரிவுகளில் திட்டமிடற் பிரிவுகள் உள்ளன. இவை இந்தச் சந்தர்ப்பத்தில் முழு அளவில் சூழற் பொருத்தமான நடவடிக்கைகளைச் சுயாதீனமாகச் செய்வதற்கு முன்வருதல் அவசியம்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்கம் ஆகியவற்றின் நிதியளிக்கைக்கு ஏற்றவாறு திட்டங்களை உருவாக்குவதற்கு அப்பால், அவற்றின் கருத்தமர்வுகள், செயலமர்களுக்குள் கட்டுப்பட்டு நிற்பதற்கு அப்பால் திறந்த முறையில் செயலாற்ற வேண்டும்.
ஏனென்றால் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த நிலைமை மேலும் தீவிரமடைந்து மிகக் கடினமான நிலைமைகளை உருவாக்கக் கூடும்.
இனியாவது இதைக் குறித்துச் சிந்திப்பார்களாக. □

# Justice for ஆயிஷா




பண்டாரகம, அட்டலுகம பகுதியைச் சேர்ந்த 9வயதுச் சிறுமி பாத்திமா ஆயிஷா கடந்த 27ஆம் திகதி காலை தனது வீட்டிலிருந்து 250 மீற்றர் தூரத்தில் உள்ள கோழிக்கடைக்கு சென்று வீடு திரும்பவில்லை. சிறுமியின் பெற்றோர் காவல்த்துறைக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சிறுமி கடைக்குள் நுழைவது மற்றும் வெளியேறுவது போன்ற சிசிடிவி காட்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில் குறித்த சிறுமியின் சடலம் மறுநாள் (28.05.2022) அவரது வீட்டிற்கு அருகிலுள்ள சதுப்பு நிலத்தில் கண்டெடுக்கப்பட்டது.



## ஆயிஷாவுக்கு

ஒரு சிங்கள சகோதரியின் பாடல்....

சுவனத்தின் போவே
அமைதிகொள் ஆயிஷாவே
நீ சென்றது பாலைவனமும் இல்லை
படர் காடும் இல்லை,
படைத்தவனிடமே சென்றிருக்கிறாய்

நீ பறந்து திரி
எல்லையே இல்லாத அந்தப்
பசுமை நிறைந்த சுவனத்தின் சிட்டாக

சந்திப்போம் சுவன வாசலில்
இன்ஷா அல்லாஹ்

உன்னைக் காப்பாற்ற முடியதாய
சமுகமாக மாறிவிடும்.
மன்னித்துவிடு மகளே!

காட்டு
மிராண்டிகளும், கொடியவர்களும்
வாழும் உலகம்
உனக்குத் தேவையில்லை.

நிம்மதியாக உறங்கு மகளே, உனக்கு
இதைவிட வார்த்தை ஒன்றுமில்லை.
உன்னை ஒருபோதும் கண்டிராத
உம்மாவுக்கு சொல் தெரியாது,
மன்னித்து விடு மகளே.

## ஆயிஷா

-ஜமீல்-

கண் மணியே! வெண் பனிச் சரமே
வெள்ளை இறால் குஞ்சே
கொள்ளை அழகொழுகும்வர்ணமிகு வானவில்லே

என் செல்லமே சித்திரமே
பசுந் தளிரே முத்து மணிச் சுடரே
சுடரேந்தி கும்மிருட்டை
வாசித்துப் பறந்த மின் மினியே

யானையின் தந்தமென நீல நதியில் நீந்துலாவிய
இரண்டாம் பிறை நிலவே குட்டி தேவதையே
பிரகாசமாய் கண் சிமிட்டி ஒளிர்ந்த
ஒற்றை விண் மீனல்லவா நீ
நின்னை எதற்காககொலை புரிந்தார்கள்
கயவர்களென அறியேன் காண்

ஆயினும் நெஞ்சு பொறுக்குதில்லை
நின் மூச்சறுத்து சேற்றினில் புதைத்து விட்ட
வஞ்சகனை நினைத்து அதனாலுனை பாடுகிறேன்
என் கண்ணீரை காய்ச்சுகிறேன்

புறாவின் மனதையும் ரோஜா மலரின்
மென்மையிலும் மென்மை மிகு நின்னை பாட
என் சொற்கள் தடுமாறுது பூச்சரமே
இருந்தும் பச்சா தாபங்களின்றி
படு பாதகம் புரிந்து விட்டு
கடவாயிலிருந்து வீணி வடிய வடிய
வேடிக்கை பார்த்து நிற்கும் வேட்டை நாய்களின்
சிரம் மண்ணில் உருள
என் சொல் வாளாயும் தீயாயும்
நீளுமென் சிட்டுக் குருவியே பார்
எதற்காக உயிர் பிரிந்தோமென்று
கடைசிவை அறியாமல் அமைதியாக உறங்கும்
நறுமண மிகு மல்லிகை செண்டே
அன்பு மகளே ஆயிஷா
நின் மரணம் என்னில் எதைத்தான்
விதைத்துச் சென்றிருக்கும்
ஒரு இரங்கற் பாவை வடித்து முடிக்கும்
இம் மன நிலையை தவிர □

# இலங்கையில் பெண் தலைமை குடும்பங்களின் வாழ்வியல் (பாகம்-8)

**-ப்ரியமதா பயஸ்-**



காலம்காலமாக கட்டிக் காக்கப்படும் இலங்கை பெண் சமூக வாழ்வியலில் பல கேள்விக்குறிகளை இட்டு சென்றிருக்கிறது இலங்கையில் நடந்த யுத்தமும், நவீன கால வாழ்வியல் முறைகளும் என்றால் அதற்கு மாற்று கருத்து இல்லை.

இங்கே ஒரு விடயத்தை முதன்மையாக நாம் ஆராய வேண்டி இருக்கின்றது. விதவைகள், கணவனை இழந்தவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களை தலைமைதாங்கும் பெண்கள் என எல்லோரும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் என்ற வரையறைக்குள்ளேயே உள்வாங்கப்படுகின்றனர். இவர்களின் வாழ்வியல் தனிப்போக்காக அதாவது அவர்களின் முயற்சிக்கும் செயற்பாட்டுக்கும் ஏற்றதுபோல வடிவமைக்கப்படும்போது சமூக விழுமியங்களில் இருந்து வழுவுகின்றனர் என்ற ஒரு பாரிய குற்றச்சாட்டை இந்த சமூகம் அவர்கள்மேல் வைப்பதைக் காணமுடிகின்றது.

இங்கே இரண்டு வகையான விடயங்களுக்கு நான் முழுமையாக விளக்கமான பதில் கூறவேண்டியவளாக இருக்கிறேன். ஒன்று - ஒரு பெண்ணால் இப்படித்தான் வாழ்ந்து முடிக்க வேண்டும் என்கின்ற கட்டுபாடுகளை இந்த சமூகமே அவள்மேல் திணித்து வைத்திருந்தது என்பதை நாம் மறக்கக் கூடாது. காலம் காலமாக அவர்களின் வாழ்வியலில் இந்த சமூகமே குறுக்கீடு செய்து இருக்கிறது அதனால்தான் கணவனை இழந்தவர்கள் கடைசிவரை (அது எந்த வயதில் கணவனை இழந்தாலும்) விதவையாகவே வாழ்ந்து முடிக்க வேண்டும் என்ற கட்டாயத்தை வழங்கி இருக்கின்றது.

இப்போது வாழ்வியல் நிலைமை மிக வேகமாக மாறி இருக்கிறது, அது அவர்களுக்கு இருக்கும் பிள்ளைகளின் வாழ்க்கை முறையைக்கூட தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதால் அந்த பிள்ளைகளுக்காக தங்கள் வாழ்க்கை முறையை மாற்றும் கட்டாயத்தில் பெண் தலைமைக்குடும்பங்கள் மாறி இருக்கின்றன. இவை சமூகத்தில் முகமூடி அணிந்த நல்லவர்கள்போல் வேசம்போடும் பலரால் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுகிறது. குறிப்பாக பெண்களே அவர்களை விமர்சிப்பது காலக்கொடுமை.

இரண்டாவது ஆண்களின் பலதார மணங்களை ஊக்குவிக்கும் சமூகம் பெண்களின் மறுவாழ்வுக்கு முகம் சுழிப்பது இன்னும் அவர்கள் சமூக ரீதியில் உயரிய அறிவை பெறவில்லை என்பதையே குறிக்கின்றது.

இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இந்த சமுகம் எனக்கும் பிள்ளைகளுக்கும் சோறுபோடாது. நானே என்னையும் பிள்ளைகளையும் பாதுகாக்க உழைக்கவேண்டும் என்ற தற்துணிவோடு கத்தியை, கோடரியை கையில் பிடித்துக்கொண்டு காடு மேடுகள் அலைந்து, கடல் நீரேரியில் காய்ந்து, வீதி தோறும் நடையாய் நடந்து சிறு வியாபாரம் செய்யும் பெண்களுக்கு கட்டாக்காலி எனப் பெயர் சூட்டும் இந்த சமூகம் அவர்களுக்கு ஒரு நேரம் சோறு போட தயாராக இல்லை என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் இங்கே பதிவு செய்கிறேன்.

இலங்கையில் கல்வி நிலைமை மிக உயர்வாகவே காணப்படுகின்றது அனைவருக்கும் இலவச கல்வி வழங்கப்படுகிறது. இதில் அதிகமாக பெண்களுக்கான கல்வி இன்னமும் உயர் நிலையில் இருப்பதால் பெண்களின் சமூக வாழ்வியலில் மிக பாரியதொரு மாற்றத்தை சற்று உயர்வாகவே நாம் எதிர்பார்க்கவேண்டி இருக்கிறது. இந்த சமூகம் நமக்கு சோறு போடாது என்பதை பல பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தற்போது உணர்கிறார்கள் என்பது மிக மகிழ்ச்சியான செய்திதான். இன்றைய நவீன உலகில் கல்வியே மாற்றத்திற்கான அடித்தளம் எனக் கூறுவது முற்றிலும் உண்மையே. கல்வியறிவே மனிதனை வளர்ச்சியடையச் செய்வதாகவுள்ளது. தொழிலினையே மையமாகக் கொண்டு வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் சமுதாயமானது பெண்களினது நலனையோ அவர்களின் திறமைகளையோ வெளிக்கொண்டுவருவதில் ஆர்வம் காட்டுவதில்லை என்றே கூற வேண்டும். “பெண்கள் நாட்டின் கண்கள்” என்பதனை வலியுறுத்தும் சமுதாயம் பெண்களுக்கான முழுமையான சுதந்திரத்தை வழங்க வேண்டும்.
அத்தோடு பெண்கல்விக்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.

உலக நாடுகளில் கல்வி என்பது மனிதர்களின் மூச்சாகக் காணப்படுகின்றது.கல்விக்காக தமது வாழ்நாள் முழுவதையுமே செலவு செய்வதோடு தமது அறிவினையும் விருத்தி செய்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.இருப்பினும் இன்று பெண் கல்வியானது ஒரு காத்திரமான அறிவுத்தளத்தில் பேசப்படுகின்றது .அது பாதிக்கப்பட்டு இருக்கும் நலிவுற்று இருக்கும் சமுதாயம் வரை உதவுகிறது.

“ஒரு ஆண் கற்பதால் அவன் மட்டுமே கற்கிறான் மாறாக ஒரு பெண் கற்கும் போது மொத்த சமூகமே கற்கிறது” எனலாம். குடும்பத்தையே சுமக்கும் பெண்களின் கல்வி முன்னேற்றம் பல விதத்திலும் வளர்ச்சியடைந்திருக்கிறது.

பெண் என்பவள் குடும்பத்தைக் கவனித்தல், பிள்ளைகளைப் பராமரித்தல், வீட்டை நிர்வகித்தல் போன்ற பல்வேறு பணிகளை கஷ்டங்களினால் பெற்ற அனுபவத்தின் மூலம் குடும்பத்தினைச் சிறப்பானதாகக் கொண்டு செல்கின்றனர்.

எப்போதும் பெண்களுக்கு முறையான கல்வி என்பது ஆண்களுக்குக் கிடைப்பது போன்று முழுமையாகக் காணப்படுவதில்லை. சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளால் அவர்களின் பாடசாலைக்கல்வி பாதியிலேயே நின்றுவிடுகின்ற நிலையினைக் காணலாம். உதாரணமாக, திருமணம் பெண்கள் மீதான குடும்பத்தினுடைய திணிப்புக்கள், பிழையான கலாசாரக் கொள்கைகள் என்பன அவர்களின் உயர் கல்வியைப் பாதிக்கின்றன என்றே கூறலாம். இவற்றை கைவிட்டு பெண்களுக்கான வாழ்வியல் ஒழுங்கை இன்னமும் நாம் விஸ்தீரணப்படுத்த வேண்டும். காரணம் இலங்கை வாழ்வியல் சூழல் அந்த நிலமையையே வலியுறுத்தி நின்கின்றது. □

தொடரும்...



# சமூகப்போராளி தெணியான் விடை பெற்றார்

தெணியான் எனும் பெயரில் அறியப்பட்ட கந்தையா நடேசன் அவர்கள் இலங்கையில் இலக்கியத்துக்கான அதி உயர்விருதான சாகித்ய ரத்னா விருது பெற்றவர் இன்று (22.05.2022) மறைந்தார். தனது எழுத்துக்களால் விளிம்பு நிலை மக்களின் வாழ்வினை வரலாறாக்கிய தெணியான் 1942இல் யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பொலிகண்டி கிராமத்தில் பிறந்தவர். தொழில்ரீதியில் தமிழ் ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றி, யாழ்.கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலயம் அரச பாடசாலையாக அங்கீகாரம் பெற்றபோது தலைமை ஆசிரியர் உயர்வுப் பொறுப்புப் பெற்றவர், தொடர்ச்சியில் பகுதித்தலைவர், கனிஸ்ட அதிபர், உப.அதிபர், தொலைக்கல்விப் போதனாசிரியர் போன்ற பதவிகளை வகித்து 2002ஆம் ஆண்டு ஓய்வு பெற்றவர். முற்போக்கு எழுத்து அணியை சேர்ந்த தெணியான் கலகக்கார எழுத்தாளர்கள் அணியில் முதல் வரிசையினைச் சேர்ந்த படைப்பாளி.

1964இல் "விவேகி" சிற்றிதழில் வெளிவந்த "பிணைப்பு" என்ற சிறுகதையுடன் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது.
சுமார் 150 சிறுகதைகள், 10நாவல்கள், 3குறுநாவல்கள், 5வானொலி நாடகங்கள், நூற்றுக்கு மேலான கட்டுரைகள், விமர்சனங்கள், செவ்விகள் என்பன இவரது படைப்பாக்கங்கள்.

இவரது வாழ்நாள் இலக்கியப் பணிக்காக இலங்கை அரசு "சாகித்யரத்னா"(2013), வடக்கு மாகாண "ஆளுனர் விருது", (2008), இலங்கை இந்து கலாசார அமைச்சு "கலாபூஷணம்"(2003) போன்ற விருதுகளை வழங்கி இவரைக் கௌரவித்துள்ளது.

இவரது "கழுகுகள்" நாவல் "தகவம்" பரிசையும், "மரக்கொக்கு" நாவல் இலங்கை அரசினதும், வடகிழக்கு மாகாண சபையினதும் சாகித்திய விருதுகளையும், "காத்திருப்பு" நாவல் வடகிழக்கு மாகாண சபையின் பரிசையும், "கானலின் மான்" நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருதையும்", "குடிமைகள்" நாவல் இலங்கை அரசின் சாகித்தியவிருதையும், "சிதைவுகள்" குறு நாவல் தேசிய கலை இலக்கியப் பேரவை பரிசையும், சுபமங்களா பரிசையும், சின்னப்பபாரதி அறக்கட்டளை விருதையும், "ஒடுக்கப்பட்டவர்கள்" சிறுகதைத்தொகுதி கொடகே விருதையும் பெற்றுள்ளன.

சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் இள வயதிலிருந்தே மார்க்சியக் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுள் கால உறுப்பினர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளகர்த்த அங்கம் வகித்த நாளில் சங்கத்தின் யாழ் கிளைச் செயலாளர் பொறுப்பினை வகித்தவர். சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இணைந்து சாதிய ஏற்றத் தாழ்வுக்கு எதிரான போராட்டங்களில் பங்கு கொண்ட ஒரு சமூக விடுதலைப்போராளி.

ஏற்றத் தாழ்வற்ற சமத்துவமான சமுதாயமே அவரது இலட்சியமாக இருந்தது.
எனக்கு தமிழ் கல்வியை புகட்டிய ஆசான். எனது தந்தையாரை அண்ணர் என அழைத்தாலும் அவரது நெருக்கமான தோழர். எனக்கு சிறந்த வழிகாட்டியாகவும், ஆதர்சனமாகவும் விளங்கிய அவரது இழப்பு பேரிழப்பாகும்.

**-கரவைதாசன்- டென்மார்க்**
ஓவியம், நன்றி: T.சௌந்தர்




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist, Oslo, Norway)

கேள்வி:
எனக்கு இன்னமும் 40 வயதே ஆகவில்லலை. உயர் இரத்த அழுத்தம் (Høy blodtrykk) உள்ளது போல் உணர்கிறேன். வீட்டில்தான் அளர்ந்து பார்த்தேன். இது ஆபத்தானதா?, என்ன சிகிச்சையை மேற்கொள்வது? எனது அம்மாவுக்கும் உயர் இரத்த அழுத்தம் (Høy blodtrykk) இருந்தது. அவர் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டு இறந்தார். இந்த யோசனை என்னை மிகவும் அழுத்துகிறது. மன உளைச்சலாகவும் இருக்கிறது. என்ன செய்வது?

பதில்: குறைந்த வயதில் உயர் இரத்தஅழுத்தம் ஏற்படுகின்றபோது வளமையாக வயது கூடுகின்றபோது ஏற்படுகின்ற உயர் இரத்தஅழுத்தம் தவிர வேறு காரணங்கள் இருக்குமா என பரிசோதிக்கப்பட வேண்டும். இது உங்கள் குடும்பவைத்தியர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவிலுள்ள வைத்திய நிபுணரின் ஆலோசனையுடன் ஆரம்பிக்கப்பட வேண்டும், தேவையேற்படின் வெளிநோயாளர் பிரிவுக்கு உங்களை அனுப்பி வைக்கவேண்டும். இரத்தஅழுத்தம் அதி உயர்வாக இருந்தால் மிகவும் ஆபத்தானது எனவே சிகிச்சை உடன-டியாக ஆரம்பிக்கப்பட வேண்டிய அதேவேளை, அதற்கான காரணங்களையும் ஆராயவேண்டும். பரம்பரையில் உயர் இரத்தஅழுத்தம் இருக்கின்ற போது அது தலைமுறை தலைமுறையாக வருவதற்கான சாத்தியமுள்ளதாகக் கருதப்படுகின்றது. ஒருவர் இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராமல் உயர் இரத்த அழுத்தத்துடன் நீண்டகாலம் வாழுகின்ற போது அது பல உடலுறுப்புகளில் பாதிப்புகளை ஏற்படுத்தி காலப்போக்கில் பல உபாதைகளை ஏற்படுத்தும். வைத்தியருடைய ஆலோசனையுடன் சுகாதாரமான வாழ்வை வாழ்வதும் பரிந்துரைக்கப்படுகின்ற மருந்துகளை கிரமமாக எடுப்பதும் மிகவும் அவசியம். இதை சரிவரச் செய்தால் பயமோ மன உளைச்சலோ ஏற்படத்தேவையில்லை.

## குரங்கு அம்மை Monkeypox



குரங்கு அம்மை என்னும் தொற்றுநோய் தற்போது பல நாடுகளில் பரவி வருகின்றது. இது வைரஸால் ஏற்படும் தொற்று நோயாகும். காய்ச்சல், தலைவலி, உடலில் தசை வலி, நெறிகட்டுதல், களைப்பாக உணர்தல் போன்றன இதனது அறிகுறி-களாகும். சின்னம்மை, பெரியம்மை போன்ற நோய்களை ஒத்தது. பெரியம்மைத் தடுப்பூசியே இந்நோயைத் தடுக்க வல்லமை கொண்டது. விலங்குகளிடம் இருந்தே இந்த நோய் மனிதர்களுக்கும் பரவலாம். குரங்கு அம்மை கொரோனா நோய் போல் எளிதில் தொற்றுவது அல்ல எனவும் சுகாதார மையம் செய்தி விடுத்துள்ளது.




பேர்கன் வெளிநாட்டவர் கலாசார அமைப்பின் (Bergen internasjonale kultursenter) ஏற்பாட்டில் மாதமொரு சனிக்கிழமை குடும்ப தினம் (Familie dag) நிகழ்வு நடைபெற்று வருகிறது.
இந்த நிகழ்வுகளில் நோர்வே மற்றும் புலம்பெயர் நாடுகள் கலந்து தமது கலை நிகழ்வுகளை நடாத்துவதோடு, தமது நாட்டு உணவினையும் பரிமாறுவதுண்டு. கடந்த மே 28ம் நாள் சனிக்கிழமை Bergen internasjonale kultursenter மண்டபத்தில் தமிழர்களின் நாளாக அனுஷ்டிக்கப்பட்டது.
அன்றைய நிகழ்வினை பேர்கன் தமிழ் சங்கம் BIKS உடன் இணைந்து நடாத்தி இருந்தது.
பேர்கன் தமிழ் சங்கத்தின் பொதுநல பொறுப்பாளர் மக்வின் யோகேந்திரன் அவர்கள் முன்னின்று செயல்படுத்தினார்.
பூஜா சுரேஷ்குமார் மற்றும் அனுஷா சுரேஷ்குமார் ஆகிய சகோதரிகள் வீணை, புல்லாங்குழல் இசையினை சிறப்பாக மீட்டினர். இவர்களது இசையானது பல சிறுவர்களையும் அமைதியாக அமர்ந்து இரசிக்க வைத்தது. முடிவில் மதிய உணவாக தமிழ் உணவு விற்பனை செய்யப்பட்டது.





# விடியலற்ற தீவு நாள்கள் -மின்ஹா.



இரவுகள் பகலை உற்றுநோக்குகின்றன
பகல்கள் இரவை உற்றுநோக்குகின்றன
விடியவேயில்லை ஒரு தேசத்தின் காரிருள்

ஏங்கும் நீள் தவிப்பு
உள்ளங்களில் மலைகளை
வளர்த்து
சூழ்நிலைகளின் சுமையை
சாகசமாக பளுதூக்கிப்
படமெடுக்கிறது

நீண்ட வரிசையில்
வாழ்வைக் கரைத்து
மனதின் வெம்மையில் ஊற்றிப்
புசிக்கின்றது தீவு முகாம்

விலையேற்றத்தில்
மூன்றுவேளை போசனம்
இரண்டு
ஒன்று
பட்டினி
மரணம் என
அவரோகணமாகிறது

நாளுக்கு நாள் தேய்ந்து போகும்
பணத்தின் சக்கரங்கள்
காற்றையிழந்து கனவு வாழ்வை சுமந்து
ஓட மறுக்கின்றன

அங்கேயே வீதியில் வரிசையில்
வெகுநேரம் நின்று எல்லோருமாக
சீனப்பெருஞ்சுவரின் பாதையை வளர்க்கின்றர்

எங்கும் தப்பிக்க முடியாத துயரை எழுதி
அடைபட்ட குடுவையொன்றில்
தங்களை உருச்சிறுத்து நிரப்பி
ஒவ்வொருவராக தம்மை
ஆழ்கடலில் எறிந்துகொள்கின்றனர்

விளிம்பு நிலை சாமானியனின்
உள்ளக்கண்களில் வழிந்து சொரியும்
குமுறலும் பதைபதைப்பும்
வியர்வை வெள்ளமாய்
வெய்யிலில் வழிந்தோடி
கானல்நீராகிறது

நித்தம் ஒரு பாடலை எழுதி மெட்டெழுதி
கசக்கிவீசப்படும் தேசம்
அரசியல் கயவர்களால்
குப்பைத்தொட்டிக்குள்
விதிக்கப்படுகிறது

வறுமையின் பிடியில்
அகப்பட்டு நித்தியமாய்
இருண்மையின் நிறமென்றாகிறது
நலிவுற்ற மக்களின் ஜீவிதம்

ஓ அந்தகாரமே நீங்கிவிடு!






## Vi går i 17 mai tog

Aurora 5år

Mila 5år





Martine 4år

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN 2703-8440